# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 24 வெள்ளிக்கிழமை 10.11.2025 கதிர் 366









## கோர விபத்தில் மாணவன் மரணம்! பலரின் நிலைமை கவலைக்கிடம்!!

அனுராதபுரம், நவ. 10

அனுராதபுரம், தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலாவ - ஜயகங்க சந்தி பகுதியில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவன் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் 46 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 36 பேர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. மேலும் 10 பேர் தலாவ வைத்தியசாலையில்

7 ➤

# ஆளும் கட்சி காட்டுச் செடிகளாகி எதிரணி தங்கச் செடிகளாக மாறலாம்

## சபையில் சாமர சம்பத் எம்.பி. ஆருடம்

கொழும்பு, நவ. 10

எதிர்க்கட்சியினர் காட்டுச் செடிகளாகவும், ஆளும் கட்சியினர் தங்கச் செடிகளாகவும் இப்போது காணப்பட்டாலும் இன்னும் சிறிது காலத்தில் ஆளும் கட்சியினர் காட்டுச்செடிகளாகி, எதிர்க்கட்சியினர் தங்கச் செடிகளாக மாறும் நிலை ஏற்படலாம் என்று புதிய ஜனநாயக முன்னணியின் எம்.பி சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போதே சாமர சம்பத் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

7 ➤



## பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவி திடீரென உயிரிழப்பு



கொழும்பு, நவ. 10

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் உயிரியல் பரீட்சைக்குத் தோற்றவிருந்த 19 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் தம்புள்ளையில்

7 ➤

## இரட்டைக்கொலை வழக்கில் அறுவருக்கு மரணதண்டனை!



அம்பாறை, நவ. 10

அம்பாறை மேல் நீதிமன்றம் இன்று அறுவருக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இந்த மரண தண்டனை, 2015 ஆம் ஆண்டு பதியத்தலாவைப் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ளது.

7 ➤

## ஊடக சந்திப்பைப் புறக்கணித்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

வவுனியா, நவ. 10

வவுனியாவில் இடம்பெற்ற ரெலோ கட்சியின் ஊடக சந்திப்பை அக்கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் புறக்கணித்து வெளியேறி இருந்தார்.

செல்வம் அடைக்கலநாதன் தொடர்பாக சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையத்தளங்களில் வெளிவந்த குரல் பதிவு தொடர்பிலும், கட்சியின் செயற்பாடுகள் தொடர்பிலும்

7 ➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# 1818 என்ற துரித இலக்கத்திற்கு 800 முறைப்பாடுகள்



கொழும்பு, நவ.10

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகத் தகவல் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 1818 தொலைபேசி இலக்கத்துக்கு 800 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இந்த 800 முறைப்பாடுகளும் கடந்த 4 நாட்களுக்குள் கிடைத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று நவம்பர் 09 நடைபெற்ற, விஷப் போதைப்பொருள் ஒழிப்புக்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கொழும்பு மாவட்டச் செயற்பாட்டுத் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

"பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன. 1818 அவசர அழைப்பு இலக்கத்தை அறிமுகப்படுத்தியதன் பின்னர், 4 நாட்களுக்குள் சுமார் 800 தொலைபேசி அழைப்புகள் கிடைத்துள்ளன.

அவை சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் இருந்து அதிகளவான தகவல்கள் வருகின்றன."

"அதேபோல், இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட முதல் 4 நாட்களில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 5,300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது கொழும்பு மாவட்டத்தில் போதைப்பொருள் பரவல் அதிகளவில் உள்ளதைக் காண முடிந்தது." என்றார்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகத் தகவல் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 1818 தொலைபேசி இலக்கத்துக்கு 800 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இந்த 800 முறைப்பாடுகளும் கடந்த 4 நாட்களுக்குள் கிடைத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று நவம்பர் 09 நடைபெற்ற, விஷப் போதைப்பொருள் ஒழிப்புக்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கொழும்பு மாவட்டச் செயற்பாட்டுத் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

"பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன. 1818 அவசர அழைப்பு இலக்கத்தை அறிமுகப்படுத்தியதன் பின்னர், 4 நாட்களுக்குள் சுமார் 800 தொலைபேசி அழைப்புகள் கிடைத்துள்ளன.

அவை சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் இருந்து அதிகளவான தகவல்கள் வருகின்றன."

"அதேபோல், இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட முதல் 4 நாட்களில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 5,300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கொழும்பு மாவட்டத்தில் போதைப்பொருள் பரவல் அதிகளவில் உள்ளதைக் காண முடிந்தது." என்றார். (ஐ)

# மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு: ரெலோவின் முடிவு அறிவிப்பு



*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படுவது தொடர்பில் பங்காளிக் கட்சிகளுடன் பேசியே முடிவு எடுப்போம் என ரெலோ கட்சி அறிவித்துள்ளது.*

*தமது கட்சி மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட அல்லது அரசியல் ரீதியாகச் சேறு பூச வேண்டும் என்று சமூக ஊடகங்களில் பொய்ப் பிரசாரங்கள் பரப்பப்படுகின்றன என்றும் அந்தக் கட்சியின் பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்தார்.*

*ரெலோ கட்சியின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. ,ந்தக் கூட்டத்தின் நிறைவில் அவர் ,வ்வேறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,*

*ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக நாம் ,ன்று பயணித்துக்*

*கொண்டிருக்கின்றோம். அத்துடன், தமிழ்த் தேசிய பேரவையுடன் புரிந்துணர்வு ஒன்றையும் மேற்கொண்டிருக்கின்றோம். மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படுவது தொடர்பில் பங்காளிக் கட்சிகளுடன் பேசியே முடிவு எடுப்போம் என்றார்.* (ஐ)



# பாலியல் கல்வி குறித்து விளக்கிய பிரதமர்

கொழும்பு, நவ.10

பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களை தவிர்க்க பிள்ளைகளுக்கு வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வி முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து கண்டி மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நிபுணர்களின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் இதன்போது கூறினார்.

அங்கு மேலும் உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய,

"6 ஆம் தரத்திற்காக, வயதுக்கு ஏற்ற வகையில் ஒரு புத்தகத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சு, குறிப்பாகக் குடும்பநல சுகாதாரப் பிரிவு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. நம் நாட்டில் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தலுக்குக் பிள்ளைகள் உள்ளாகும் போக்கு அதிகரித்து வருவதால், இதிலிருந்து பாதுகாக்க பிள்ளைகளுக்கு இது பற்றி கற்பிக்க வேண்டும் என்று குடும்பநல சுகாதாரப் பிரிவு மற்றும் சுகாதார அமைச்சு தொடர்ந்து எங்களிடம் கூறி வருகின்றன.

அதேபோல், இது ஒரு பாரதூரமான பிரச்சினை என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் எங்களிடம் கூறியுள்ளது. தங்களது உடலைப் பாதுகாத்துக்கொள்வது குறித்துக் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது.

இது குறித்து அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் அதிகார சபைகளுடன் நாங்கள் கலந்துரையாடி வருகிறோம். அவர்களின் பரிந்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எந்த வயதில், எவ்வாறு, எப்போது இதை அறிமுகப்படுத்துவது என்று இன்னும் முடிவு செய்யப்பட வில்லை.



இந்தக் கலந்துரையாடல்களின்படி, பிள்ளைகளுக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய விதம் மற்றும் தங்களது உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து வயதுக்கு ஏற்ற வகையில் சரியான கல்வி கிடைக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

இந்தக் விடயங்களை நாங்கள் சுகாதாரத் துறையின் நிபுணர்களின் ஆலோசனையின்படியே செய்வோம்." என்றார். (ஐ)



## பன்னிப்பிட்டியவில் போதைப்பொருள் பொதி செய்த வீடு சுற்றிவளைப்பு

கொழும்பு, நவ.10

பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களை தவிர்க்க பிள்ளைகளுக்கு வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வி முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என பிரதமர் மஹரகம, பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் 'ஐஸ்' போதைப்பொருளைப் பொதி செய்து விநியோகிக்கும் வீடு ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு, அதன் பிரதான கடத்தல்காரர் உட்பட ஆறு பேர் நுகேகொடை குற்றவியல் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வீட்டில் இருந்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களையும், அவற்றைப் பொதி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பல உபகரணங்களையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது, 15 கிராம் 'ஐஸ்' போதைப்பொருள், பொதி செய்யப் பயன்படுத்தப்படும் சீலர் இயந்திரம் ஒன்று, இரண்டு இலத்திரனியல் தராசுகள், 'ஐஸ்' போதைப்பொருளை அளவிடப் பயன்படுத்தப்படும் வெவ்வேறு அளவுகளைக் கொண்ட சிறிய அளவிடும் உபகரணங்கள் சில, சிறிய பொலித்தீன் உறைகள் மற்றும் கடத்தல் மூலம் ஈட்டப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 16,800 ரூபா பணம் என்பன மீட்கப்பட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் 22 வயதுடைய இளைஞர் என்றும், ஏனைய ஐவரும் அவரிடம் இருந்து போதைப்பொருள் கொள்வனவு செய்வதற்காக அந்த வீட்டுக்கு வந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பன்னிப்பிட்டியவில் இளைஞர் ஒருவர் மாத வாடகையாக 20,000 ரூபா செலுத்தி வீடொன்றைப் பெற்றுக்கொண்டு பாரியளவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதாக முழு நாடுமே ஒன்றாக தேசிய செயற்பதிட்டத்திற்கு இணையாக, நுகேகொடை குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில், கொழும்பு கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் இருந்து பெறப்படும் 'ஐஸ்' போதைப்பொருளை இவ்வாறு பொதி செய்து விநியோகிப்பதாகத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபருக்குப் போதைப்பொருளை வழங்கும் பிரதான கடத்தல்காரர் யார் என்பதைக் கண்டறியும் விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ஐ)

## சுகாதார சேவைகளை டிஜிட்டல் மயமாக்க வழிகாட்டல் குழு




கொழும்பு, நவ.10

நாட்டின் இலவச சுகாதார சேவையை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்கும் குழுவை நிறுவுவதற்கான விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

நாட்டின் இலவச சுகாதார சேவையை டியிட்டல் மயப்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்கும் விசேட கலந்துரையாடல் சமீபத்தில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், அடுத்த பத்து ஆண்டுகளுக்கு (2026-2035) செயல்படுத்தப்படவுள்ள தேசிய சுகாதாரக் கொள்கைக்கு ஏற்ப நாட்டின் இலவச சுகாதார சேவையை டியிட்டல் மயப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் அதற்காக பின்பற்ற வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

டிஜிட்டல் மயமாக்கலுக்கான கட்டமைப்பை நிறுவுதல், டிஜிட்டல் ஊடகங்கள் மூலம் சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், சர்வதேச ஆதரவுடன் முக்கிய திட்டங்களை (HIQI> HSEP> PHSEP) செயல்படுத்துதல், டிஜிட்டல் மாற்றத்திற்கான தேவைகள், கருத்துக்கள் குறித்து இங்கு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

மனித வள மேம்பாடு மற்றும் இந்தப் பணியை திறம்படச்செய்வதற்குத்தேவையான பயிற்சி குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இது தொடர்பான திட்டவரைபை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் துணை இயக்குநர் டாக்டர் அர்ஜ/ன திலகரத்ன சமர்ப்பித்தார்.

சுகாதார துணை அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜேமுனி, டிஜிட்டல் பொருளாதார துணை அமைச்சர் எரங்க வீரரத்ன, மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் டாக்டர் ஹான்ஸ் விஜேசூரிய, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்க, அமைச்சின் மேலதிக செயலாளர்கள், துணை இயக்குநர்கள் நிபுணர்கள் மற்றும் பலர் இந்த விசேட கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ஐ)

## "ஜனாதிபதியின் கூற்றுக்கு எந்த ஆதாரமும் இல்லை"



கொழும்பு, நவ.10

இலங்கையின் இறக்குமதிகள் அதன் ஏற்றுமதி வருவாயை விட அதிகமாக வளர்ந்துள்ளன, இதனால் செலுத்துமதி சமநிலை பற்றாக்குறை அதிகரித்துள்ளது, எனவே, அந்நிய செலாவணி ஒட்டங்களில் நிலைத்தன்மை இருப்பதாக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் கூற்றுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்று முன்னணி சோசலிசக் கட்சியின் (குடுளீ) கல்விச் செயலாளர் புபுது ஜெயகொட தெரிவித்தார்.

சமீபத்தில் நடைபெற்ற பொது கருத்தரங்கில் 2026 பட்ஜெட் குறித்து கருத்து தெரிவித்த அவர், கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதிக்கான செலவு 12.2 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும், ஏற்றுமதி வருவாய் 7.3 சதவீதம் மட்டுமே வளர்ந்துள்ளது என்றும் கூறினார்.

"ஜனாதிபதி தனது உரையில் அந்நிய செலாவணி நெருக்கடியை நிராகரித்தார். ஆனாலும், அவர் யதார்த்தத்திலிருந்து வெகு தொலைவில் இருக்கிறார். பொதுமக்களிடமிருந்து மறைக்கப்படுவது யதார்த்தம்தான்," என்று அவர் கூறினார்.

வாகன இறக்குமதி சட்டமூலம் எல்லாவற்றிலும் மிக உயர்ந்தது என்றும், 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் செலவிடப்பட்டதாகவும் ஜெயகொட கூறினார்.

"வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு எதிராக நாங்கள் பிரச்சாரம் செய்தோம். அது நெருக்கடிக்கு வழிவகுக்கும் என்று நாங்கள் கூறினோம்," என்று அவர் கூறினார். (ஐ)

# திமுகவை யாராலும் அழிக்க முடியாது: முதல்வர் ஸ்டாலின்



எஸ்ஐஆர் என்ற ஆயுதத்தை எடுத்து திமுகவை அழிக்க நினைக்கிறார்கள். ஆனால் திமுகவை யாராலும் அழிக்க முடியாது என முதல்வர் ஸ்டாலின் திட்டவட்டமாக தெரிவித்து உள்ளார். திருச்சியில் நடந்த ஸ்ரீரங்கம் எம்எல்ஏ பழனியாண்டி இல்ல திருமண விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: ஸ்ரீரங்கம் திமுகவின் கோட்டை. கடந்த 75 ஆண்டுகளாக சகோதரத்துவ உணர்வோடு நம் இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். திமுகவை கழகத்தினர் கழகம் என்று மட்டும் அழைப்பதில்லை, இயக்கம் என்றும் அழைப்பது உண்டு. காரணம், இயக்கம் என்பது ஓய்வே இல்லாமல் உழைப்பது. அப்படியான இயக்கம் தான் நம் இயக்கம்.

திமுகவை இயக்கம் என்று சொல்வதால்தான் நமக்கு ஓய்வே இல்லை என்று கூறுகிறேன்.

பல கோடி மக்களின் ஓட்டுரிமை கேள்விக்குறி: முதல்வர் ஸ்டாலின்

சிறிய சிறிய தடைகளை பார்த்துக்கூட நமது திமுக இயக்கம் நின்றதே இல்லை.

தமிழகத்தில் எஸ்ஐஆர் மூலம் திமுகவை அழிக்க நினைக்கும் முயற்சி ஒருபோதும் எடுபடாது. எஸ்ஐஆர் குறித்து உள்ளபடி அக்கறை இருந்தால் அதிமுக முன்கூட்டியே வழக்கு தொடர்ந்திருக்க வேண்டும். ஆனால் திடீரென வழக்கு போடுவதற்கு காரணம் என்ன?

எஸ்ஐஆரை அதிமுக ஆதரித்துக் கொண்டிருக்கிறது. தேர்தல் கமிஷன், பாஜ எதை சொன்னாலும் அதை ஆதரிக்கும் மனநிலையில் தான் இபிஎஸ் இருந்து கொண்டு இருக்கிறார். எதிர்ப்பதற்கு துணிச்சல் இல்லை. நாம் தொடர்ந்து இருக்கும் வழக்கில், தங்களை இணைத்து கொண்டு இருக்கிறார் என்று சொன்னால், ஒரு கபட நாடகம் நடத்துவதற்கு திட்டமிட்டு இருக்கிறார்கள்.

டில்லியில் உள்ள பிக் பாஸ்க்கு பழனிசாமி ஆமா சாமி போட்டு தான் ஆக வேண்டும். எதிரிகள் புது, புது உத்திகளோடு நம்மை அழிக்க அவதாரம் எடுத்து வருகிறார்கள். சிபிஐ, வருமான வரித்துறை போன்ற ஆயுதங்களை எடுத்து மிரட்டி பார்த்தார்கள். ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்போது எஸ்ஐஆர் என்ற ஆயுதத்தை எடுத்து திமுகவை அழிக்க நினைக்கிறார்கள். ஆனால் திமுகவை யாராலும் அழிக்க முடியாது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார். (ஐ)

## பொதுமக்கள் பாதுகாப்பு கேள்விக்குறி பொலிஸ் குடியிருப்பில் நடந்த கொலை பற்றி அண்ணாமலை ஆவேசம்




பொலிஸ் துறைக்கு பொறுப்பான முதல்வர் ஸ்டாலின், கையாலாகாத நிலையில் போலீசாரை வைத்திருப்பது, தமிழகத்தின் சாபக்கேடு என தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டி உள்ளார்.

அவரது அறிக்கை: திமுக ஆட்சியில், தமிழகத்தில் படுகொலைகள் நடைபெறாத நாளே இல்லை எனும் அளவுக்குச் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து இருக்கிறது. இதன் உச்சகட்டமாக, இன்று காலை, திருச்சி மாநகர் பீமநகர் மார்சிங் பேட்டையில், பள்ளிகள் அதிகம் உள்ள பகுதியில், குறிப்பாக காவலர் குடியிருப்பு உள்ளேயே புகுந்து ஒருவரை வெட்டி படுகொலை செய்திருப்பது, பொதுமக்கள் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கியிருக்கிறது.

முதல்வர் ஸ்டாலின், தற்போது திருச்சியில் தான் தங்கியிருக்கிறார். அப்படி இருக்கும்போது, காவலர் குடியிருப்பிலேயே இப்படி ஒரு படுகொலை நடப்பது, தமிழகத்தில் சட்டம்ஒழுங்கின் அவலநிலையைக் காட்டுகிறது. பெண்கள், முதியவர்கள், குழந்தைகள், என யாருக்குமே பாதுகாப்பில்லாத நிலையில் தமிழகம் தரம் தாழ்ந்திருக்கிறது.

பொலிஸ் துறைக்கு பொறுப்பான முதல்வர் ஸ்டாலின், கையாலாகாத நிலையில் போலீசாரை வைத்திருப்பது, தமிழகத்தின் சாபக்கேடு. இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார். (ஐ)

## மூன்று கொம்புகள் கொண்ட டைனோசரின் படிமம் கண்டுபிடிப்பு!



இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தின் சஹாரன்பூர் மாவட்டத்தில் உள்ள சஹான்சாரா ஆற்றின் கரையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது, 'ட்ரைசெரடொப்ஸ்' **(Triceratops)** எனப்படும் மூன்று கொம்புகள் கொண்ட டைனோசரின் படிமம் கண்டுபிடிக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் மூலம், இந்தப் படிமம் மில்லியன் கணக்கான ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என்று தெரியவந்துள்ளது.

இந்த வகை டைனோசர்கள் கிரெடேசியஸ் காலத்தில், அதாவது 100.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்திய ஆண்டுகளில் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் மில்லியன் கணக்கான ஆண்டுகள் பழமையான பல படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும், இது குறித்து கருத்துத் தெரிவித்த 'இயற்கை வரலாறு மற்றும் பாதுகாப்பு மையத்தின்' **(Natural History and Conservation Centre)** நிறுவனர், 35 முதல் 40 மில்லியன் ஆண்டுகளாக இமயமலை அடிவாரத்தில் புதைந்திருந்த இந்தப் படிமம் பாதுகாப்பதற்கு இலகுவான நிலையில் உள்ளதாகக் கூறுகிறார்.

மேலும், இது மிகவும் முக்கியமான ஒரு கண்டுபிடிப்பு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீர்குலைந்து விட்டது: இபிஎஸ்

தமிழகத்தில் அதிமுக தான் ஆட்சி அமைக்கும். அதிமுக முதல்வர் வேட்பாளர் நான் தான் என அக்கட்சி பொதுச்செயலாளர் இபிஎஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கோவையில் நிருபர்களிடம் இபிஎஸ் கூறியதாவது: திமுக ஆட்சியிகளில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. சிறுமிகளுக்கு பாதுகாப்பு இல்லை. பாலியல் வன்கொடுமைகள் சர்வசாதாரணமாக நடக்கிறது. குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் கொஞ்சம் கூட அச்சம் இல்லாமல், போலீசார் மீது பயமில்லாமல் தொடர் நிகழ்வுகள் நடைபெற்று கொண்டு இருக்கிறது. அரசு இருக்கிறதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீர்குலைந்து விட்டது. விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் பகுதியில் மாணவியை போலீஸ்காரர் பாலியல் வன்கொடுமை செய்து இருக்கிறார்.

பொரிசார் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதற்கு மாறாக இப்படிப்பட்ட பாலியல் வன்கொடுமை செயல்களில் ஈடுபடுவது, மிக மிக கொடூரமான செயல். இந்த ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பது தெள்ள தெளிவாக தெரிகிறது.

தமிழகத்தில் பொரிசார் இருக்கிறார்களா? மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறார்களா? திமுக ஆட்சியில் 6,999 சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக திமுக அமைச்சர் கூறியிருக்கிறார். அதற்கு ரூ.104 கோடி நிவாரணம் கொடுத்ததாக அறிவித்து இருக்கிறார். பாலியல் வன்கொடுமையை தடுத்து நிறுத்துவதற்கு அரசுக்கு திராணி இல்லை.

பொரிசார் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் அநீதி இழைக்கப்படுகிறது. கடந்த 50 மாதம் திமுக ஆட்சியில், 6,400 கொலைகள் நடந்து இருக்கிறது. இதுவும் மிகவும் அதிர்ச்சி அளிக்க கூடிய சம்பவம். ஏன் நிரந்தர டிஜிபி நியமிப்பதில் இவ்வளவு குளறுபடி, பாரபட்சம். அரசுக்கு வேண்டப்பட்டவர் டிஜிபியாக வரவேண்டும் என்பதற்காக தான், இதுவரை அவர்கள் நிரந்தர டிஜிபியை நியமிக்கவில்லை. டிஜிபி ஓய்வு பெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன், தகுதியானவர்கள் பட்டியலை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்.

எஸ்ஐஆர் என்றாலே திமுகவினர் அலறுகின்றனர். பதறுகின்றனர். போலி வாக்காளர்களை நீக்க எஸ்ஐஆர் அவசியம். தமிழகத்தில் எஸ்ஐஆர் பணிகளை மேற்கொள்ள வேண்டியது முக்கியம். பணிகளில் தாமதம் ஏற்பட வாய்ப்பே இல்லை. வாக்காளர் படிவங்களை வழங்க 8 நாட்களே போதும்.

முதிர்ந்த அரசியல்வாதிகள் மக்கள் பிரச்னை குறித்து பேச வேண்டும். திமுக தலைவர், உதயநிதி எங்கள் ஆட்சி குறித்து குறை சொல்ல முடிந்ததா?

அதிமுக, பாஜ கூட்டணி பேச்சுவார்த்தை முடிந்த பிறகு, உள்துறை அமைச்சர் அமித்ஷா தெளிவுப்படுத்தி விட்டார். அதிமுக, பாஜ., கூட்டணி அமைத்து உள்ளது. இந்த கூட்டணிக்கு அதிமுக தான் தலைமை தாங்கும். அதிமுக தான் ஆட்சி அமைக்கும். எங்களது கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் இபிஎஸ் என தெளிவுப்படுத்தப்பட்டு உள்ளது. மக்கள் விரோத ஆட்சி நடந்து கொண்டு இருக்கிறது. இதனை அகற்ற வேண்டும் என்ற கொந்தளிப்பு உடன் தான் மக்கள் பார்த்து கொண்டு இருக்கிறார்கள். அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை ரிப்பன் வெட்டி திறந்து வைக்கும் முதல்வர், நிதி ஒதுக்காமல் பல திட்டங்களை அறிவிக்கிறார். இப்படி ஒரு வேடிக்கையான அரசு இந்தியாவிலேயே எங்கேயும் கிடையாது. இவ்வாறு இபிஎஸ் கூறினார். (ஐ)



# கார்ப்பரேட் திட்டங்களை ஒழிக்காமல் காவிரி நீர் கிடைக்காது!

காவிரி டெல்டா மாவட்டங்களில், இந்தாண்டு சுமார் 5 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் பயிரிடப்பட்டிருக்கிறது. தற்போது இந்த பயிர்கள் கதிர் விடும் பருவத்தில் இருக்கின்றன. இப்பருவத்தில் நெற்பயிருக்கு அதிக தண்ணீர் தேவை. ஏற்கனவே போதிய நீர் கிடைக்காததால் டெல்டா மாவட்டங்களில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு நிலத்தில் வெடிப்பு ஏற்பட்டிருக்கிறது. இருக்கின்ற பயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது நீர் தேவையாக இருக்கிறது.

மேட்டூர் அணையின் நீர்மட்டமும் கடந்த செப்டம்பர் 21 காலை நிலவரப்படி 11.36 டி.எம்.சி நீர் மட்டுமே இருக்கிறது. மேட்டூர் அணைக்கான போதிய நீர்வரத்து இல்லாத நிலையிலும், சாகுபடிக்காக அணையிலிருந்து வினாடிக்கு 6504 கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதுவும், அதிகபட்சம் ஒரு வாரத்திற்கு மட்டும்தான் திறந்துவிட முடியும் என்பதே யதார்த்த நிலையாக இருக்கிறது. இந்த சூழலில் காவிரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு உரிய நீர் கிடைக்காமல் போனால், கதிர் விட்டுள்ள பயிர்கள் பால் பிடிக்காமல் பதராகிவிடும் என்ற அச்சத்தில் இருக்கிறார்கள் டெல்டா விவசாயிகள். இதே நிலை நீடித்தால் மேட்டூர் அணை வறண்டு, விவசாயத்திற்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கும் குடிநீர் பஞ்சம் ஏற்படும் அபாயமும் இருக்கிறது.

தமிழ்நாட்டின் இந்த அவலநிலை குறித்து கர்நாடக அரசும், ஒன்றிய அரசும் சிறிதும் கவலைப்படவில்லை. பருவமழைக் காலங்களில், தமிழ்நாட்டை வடிநிலமாகப் பயன்படுத்தும் கர்நாடகம், காவிரியில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையை அடவடியாக மறுக்கிறது. போதிய மழையில்லை என்பதை காரணமாக வைத்துக்கொண்டு தமிழ்நாட்டிற்கு உரிய பங்கைத் தராமல் ஏமாற்றி வருகிறது. கடந்த ஜூன் 1 ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 19 ஆம் தேதி வரை வெறும் 8.39 டி.எம்.சி நீர் மட்டுமே தமிழ்நாட்டிற்கு கிடைத்திருக்கிறது, இந்த காலகட்டத்தில் 39.97 டி.எம்.சி நீரைக் கர்நாடகத்திலிருந்து கிடைத்திருக்க வேண்டும். (ஆதாரம்: செப்டம்பர் 22-ஆம் தேதி ஆங்கில இந்து நாளிதழ்)

உண்மையில் தமிழ்நாட்டிற்கு உரிய நீரின் பங்கோ இதைவிட அதிகம். ஜூன் 9.19, ஜூலை 31.24, ஆகஸ்ட் 45 டி.எம்.சி, செப்டம்பர் 36.76 டி.எம்.சி நீரைக் கர்நாடகம் திறந்து விட்டிருக்க வேண்டும். ஆனால் ஜூன் முதல் ஆகஸ்ட் 9 வரையிலான காலகட்டத்தில் 51 டி.எம்.சி நீருக்குப் பதிலாக வெறும் 15 டி.எம்.சி நீரை மட்டுமே திறந்துவிட்டிருக்கிறது. இந்த நீரைப் பெறுவதற்கே, காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி ஒழுங்காற்றுக் குழுவையும் மாறி மாறி தமிழ்நாடு அரசு கெஞ்சவேண்டியிருந்தது.

தற்போதுகூட உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கிலிருந்து 24000 கன அடி நீர் திறந்துவிட வேண்டும் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கையை உச்சநீதிமன்றம் புறந்தள்ளியிருக்கிறது. அதுமட்டுமின்றி, கர்நாடகத்தின் குடிநீர் மற்றும் விவசாயத்தேவைக்காக 54 டி.எம்.சி நீர் மட்டுமே இருக்கிறது என்ற கர்நாடகத்தின் வாதத்தை ஏற்றுக் கொண்டு, 15 நாட்களுக்கு 5000 கன அடி நீரைத் தமிழ்நாட்டிற்கு திறந்துவிட வேண்டுமென்று அநீதியாக உத்தரவிட்டிருக்கிறது. இதுவரை காவிரியில் தமிழ்நாட்டிற்குரிய நீரைக் கொடுக்க மறுக்கும் கர்நாடக அரசுக்கு எதிராக எந்த கண்டனத்தையோ, நடவடிக்கையையோ உச்சநீதிமன்றம் மேற்கொண்டதில்லை. கடந்த 2007 ஆம் ஆண்டு காவிரி நீர் பங்கீட்டு இறுதித் தீர்ப்பிலும், உச்சநீதிமன்றமானது பெங்களூரின் சர்வதேச முக்கியத்துவத்தைக் காரணமாகக் காட்டி தமிழ்நாட்டிற்குரிய நீரில் 4.75 டி.எம்.சி நீரை கர்நாடகத்திற்கு பிடுங்கிக் கொடுத்து அநீதி இழைத்திருக்கிறது. தமிழ்நாட்டிற்கு எதிராக காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தொடர்ந்து ஓரவஞ்சனையுடன் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

உச்சநீதிமன்றமானாலும், காங்கிரசு, பா.ஜ.க எந்தக் கட்சியாக இருந்தாலும் கார்ப்பரேட் கும்பலின் நலனுக்காக தமிழ்நாட்டின் உரிமையைப் பறிப்பதில் ஒன்று சேர்ந்துகொள்கின்றன என்பதே வரலாறு. தற்போதைய உச்சநீதிமன்றத் தீர்ப்பு அதற்கான கூடுதல் நிரூபணம். தற்போதைய உச்ச நீதிமன்றத்தைத் தீர்ப்பையும் கர்நாடகம் நடைமுறைப்படுத்தாமல் போனாலும் உச்ச நீதிமன்றமோ, காவிரி மேலாண்மை வாரியமோ, ஒன்றிய அரசோ கர்நாடக அரசை நிர்ப்பந்திப்பதோ அல்லது நடவடிக்கை எடுப்பதோ எதுவும் செய்யப் போவதில்லை. ஏனெனில் இதுவரை கர்நாடகாவுக்கு எதிராக எந்தத் துரும்பையும் எடுத்துப் போட்டதில்லை என்பதே வரலாறு.

கர்நாடகாவில், காங்கிரசும், பா.ஜ.க-வும், கன்னட இனவெறியைத் தக்க வைத்துக் கொண்டு, ஓட்டு அறுவடைக்காகவே காவிரி விவகாரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன. மற்றபடி, மாநில உரிமை, சர்வதேச நீர்ப் பங்கீட்டு விதி என எதையும் மயிராய்க்கூட மதிப்பதில்லை. கார்ப்பரேட் நலனுக்கு முன்னால் இவையெல்லாம் கழிப்பறைக் காகிதம்கூட கிடையாது.

தமிழ்நாட்டில் உள்ள காங்கிரசு, பா.ஜ.கவோ இதுகுறித்து வாய்திறக்காமல் கள்ள மௌனம் சாதிக்கின்றன. தமிழ்நாடு தனக்குரிய பங்கைத் தான் கேட்கிறது என்றும், காவிரி நீர் குறித்து ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசு முறையிட்டால், தமிழ்நாடு பா.ஜ.க துணை நிற்கும் என்றும், மேகதாது அணை கூடாது என்பதில் பா.ஜ.க உறுதியாக இருக்கிறது என்றும் பல்வேறு சமயங்களில் கூறும் பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை, காவிரி நீர் தரக்கூடாது என கர்நாடகத்தில் போராடும் தனது சொந்தக் கட்சியினரைக் கண்டிக்கவில்லை. கர்நாடகத்தில் பா.ஜ.க ஆட்சியிலிருக்கும் போது, மேக தாது அணை கட்ட ஒன்றிய அரசு அனுமதியளித்ததற்காக தனது கட்சித் தலைமைக்கு எதிராகவும், ஒன்றிய அரசுக்கு எதிராகச் சிறு முணுமுணுப்பைக்கூட அண்ணாமலை செய்யவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் பா.ஜ.க ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டின் மீது அக்கறை கொண்டவர் போல வெற்றுச் சவடால்களையும், பொய்களையும் புளுகி வருகிறார்.

காங்கிரசு கட்சியின் யோக்கியதையோ பா.ஜ.கவிற்கு சற்றும் குறைவில்லாமல் இருக்கிறது. தமிழ்நாட்டில் தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்து கொண்டு, தமிழ்நாட்டில் ஓட்டு வாங்குவதற்காக தமிழ்நாட்டின் உரிமையை ஆதரிக்கிறது, அதே சமயம் கர்நாடகத்தில் ஓட்டு வாங்குவதற்காக காவிரி நீர் தரக்கூடாது என்பதையும் ஆதரிக்கிறது, காங்கிரசு தலைமையோ இது இரு மாநிலங்களுக்கிடையிலான பிரச்சினையாக சுருக்கிப்பார்க்கிறது.

தமிழ்நாட்டின் உரிமையை ஒன்றிய அரசிடம் அடகு வைக்கும் அடிமை அ.தி.மு.க.விற்கு, பா.ஜ.கவுடன் கூட்டணியைத் தக்கவைத்துக் கொள்வதிலும், சொந்தக் கட்சியினரை பா.ஜ.க-வுக்கு எதிராக பேசாமல் பார்த்துக் கொள்வதுமே போதும் போதும் என்றாகிவிடுகிறது. இதில் காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையைப் பற்றியெல்லாம் சிந்திக்க முடியாது, அது அவர்களுக்கு அநாவசியமானது கூட.

(7ஆம் பக்கம் பார்க்க...)



# மலேஷியாவில் படகு கவிழ்ந்து விபத்து மியான்மர் குடியேறிகள் 7 பேர் உயிரிழப்பு 100 பேர் மாயம்

மியான்மரில் இருந்து மலேஷியா நோக்கி சென்ற படகு கவிழ்ந்ததில்100 பேர் மாயமாகினர். இதுவரை மியான்மர் குடியேறிகள் 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. 13 பேர் உயிருடன் மீட்கப்பட்டு உள்ளனர்.

கிழக்கு ஆசிய நாடான மியான்மரில் இருந்து, புலம்பெயர்ந்தோரை ஏற்றிக்கொண்டு, படகு ஒன்று மலேஷியா நோக்கி சென்றது. மலேஷியாவின் பினாங்கு மாகாணம் அருகே சென்றபோது, அப்படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இது குறித்து தகவல் அறிந்த மலேஷிய கடற்படை உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மீட்பு பணியை துவக்கியது.

இதுவரை மியான்மர் குடியேறிகள் 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 13 பேர் உயிருடன் மீட்கப்பட்டு உள்ளனர். மேலும் 100 பேர் மாயமாகி இருப்பதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் தொடர்ந்து நடந்து வருவதாக, மலேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இனப்படுகொலை, வறுமை உள்ளிட்ட காரணங்களினால் மியான்மரில் உள்ள ரோஹிங்கியா முஸ்லிம்கள் மலேஷியா, இந்தோனேஷியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு ஆபத்தான முறையில் படகுகளில் பயணம் மேற்கொள்கின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)



## டிரம்ப் உரையை திரித்து வெளியிட்ட விவகாரம் பிபிசி உயரதிகாரிகள் ராஜினாமா

அமெரிக்க அதிபர் டிரம்ப் உரையை திரித்து வெளியிட்டதாக எழுந்த விவகாரத்தில் பிபிசி டைரக்டர் ஜெனரல் டிம் டேவி, செய்திப்பிரிவு தலைவர் டெபோரா டர்னஸ் ஆகியோர் ராஜினாமா செய்தனர்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த 2021ம் ஆண்டு ஜனவரி 6ம் தேதி ஆற்றிய உரை, கேபிடல் ஹில் கலவரத்தை தூண்டும் விதமாக இருந்தது என்று, பிரபல செய்தி நிறுவனமான பிபிசி, ஆவணப்படம் ஒன்றை வெளியிட்டது. இந்த ஆவணப்படத்தில், டிரம்ப் பேசிய இரண்டு தனித்தனி வீடியோக்கள், எடிட் செய்யப்பட்டு ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன. ஒரே வீடியோ போன்று தோற்றம் அளிப்பது போல் இந்த ஆவணப்படம் இருந்தது. இதன் மூலம் தன் உரையை திரித்து வெளியிட்டதாக டிரம்ப் மற்றும் அவரது ஆதரவாளர்கள் பிபிசிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இது போலியான செய்தி என்றும் குற்றம் சாட்டினர். இது பற்றி விசாரணைக்கு பிபிசி நிறுவனம் உத்தரவிட்டது.

முன்னாள் ஆலோசகரான மைக்கேல் பிரெஸ்காட் தலைமையிலான பிபிசியின் ஆசிரியர் வழிகாட்டுதல் குழு தொகுத்த 19 பக்க உள்தகவல் அறிக்கையில், டிரம்ப் கலவரத்தை தூண்டியது போன்ற பிம்பத்தை ஆவணப்படம் உருவாக்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இது பிபிசிக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், பிபிசி நிறுவனத்தின் டைரக்டர் ஜெனரல் டிம் டேவி, செய்திப்பிரிவு தலைவர் டெபோரா டர்னஸ் ஆகியோர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளனர். இது தொடர்பாக பிபிசி நிறுவனத்தின் டைரக்டர் ஜெனரல் டிம் டேவி வெளியிட்ட அறிக்கையில், ‘இது முற்றிலும் என்னுடைய தனிப்பட்ட முடிவாகும். எனது பதவிக் காலம் முழுவதும், குறிப்பாக சமீபத்திய நாட்களில் எனக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்,’ எனக் குறிப்பிட்டுள்ளார். புதிய டைரக்டர் ஜெனரல் நியமிக்கப்படும் வரை டிம் டேவி, அந்தப் பதவியில் தொடர்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மீண்டும் தாக்குதல் நடத்த வாய்ப்பு ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை நிறுத்தியது பாக்




இஸ்லாமாபாத் பாதுகாப்பு காரணங்களை முன் வைத்து, ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயில் சேவை 4 நாட்கள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பலூசிஸ்தான் மாகாணத்தில் பலூச் கிளர்ச்சி படையைச்சேர்ந்தவர்கள்அவ்வப்போது தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலை குறி வைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த ரயிலானது குவெட்டா மற்றும் பெஷாவர் நகரங்களுக்கு இடையே இயக்கப்படும் நீண்ட தூரம் செல்லக்கூடிய ரயிலாகும்.

கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட தாக்குலில் 26 பேர் கொல்லப்பட்டனர். அக்டோபரில் ரயில் பாதையில் குண்டு வைத்து தாக்க, 6 பெட்டிகள் தடம்புரண்டன.

இந் நிலையில் தொடரும் இத்தகைய தாக்குதல்கள் எதிரொலியாக, ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை நவ.9ம் தேதி முதல் நவ.12 தேதி வரை 4 நாட்கள் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக அந்நாட்டு ரயில்வே அறிவித்துள்ளது. தண்டவாளங்கள், ரயில்வே சொத்துகள், பயணிகள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்று உளவுத்துறை எச்சரித்துள்ளது. அதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக ரயில்வே கூறி உள்ளது. (ஐ)

## அணு ஆயுத சோதனை நடத்தும் திட்டம் இல்லை: டிரம்புக்கு ரஷ்யா பதில்

அமெரிக்கா மீண்டும் சோதனைகளை தொடங்க திட்டமிட்டுள்ள போதிலும், அணு ஆயுத சோதனை தடைக்கான தனது உறுதிப்பாட்டை ரஷ்யா மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளது.

இது குறித்து ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகையின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறியதாவது: சர்வதேச அணுசக்தி சோதனை தடைகளின் கீழ், ரஷ்யா தனது உறுதிமொழிகளை கடைபிடிக்கிறது. அணுஆயுத சோதனை நடத்தும் திட்டம் இல்லை. சோதனை நடத்துமாறு அதிபர் புடின் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அணு ஆயுத சோதனைகள் மீதான நீண்ட கால தடைக்கு ரஷ்யா உறுதிபூண்டுள்ளது. மூன்று தசாப்த கால இடைநிறுத்தத்தை அமெரிக்கா மீறினால், அதற்கு நாங்கள் எதிர்வினையாற்றுவோம். அமெரிக்கா மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இன்றைய உலகளாவிய பாதுகாப்பு கட்டமைப்பிற்கு அணுசக்தி சமநிலை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். இவ்வாறு டிமிட்ரி பெஸ்கோவ் கூறியுள்ளார். அமெரிக்க அணு ஆயுதங்களை பரிசோதிக்க தொடங்குமாறு அமெரிக்க அதிபர் டிரம்ப் உத்தரவிட்டு இருந் தார். அவர், “வேறு எந்த நாட்டையும் விட அமெரிக்காவிடம் அதிக அணு ஆயுதங்கள் உள்ளன. ரஷ்யா இரண்டாவது இடத்திலும், சீனா மூன்றாவது இடத்திலும் உள்ளது” என கூறியிருந்தார். தற்போது, அணு ஆயுத சோனையை மீண்டும் தொடங்குமாறு டிரம்பின் உத்தரவுக்கு ரஷ்யா பதில் அளித்துள்ளது. (ஐ)

## பரீட்சைக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது அறையில் படித்துக்கொண்டிருந்த மாணவி, காலை தூக்கத்திலிருந்து எழுந்திருக்காததை அவதானித்த பெற்றோர், மயக்க நிலையில் இருந்த மாணவியை தம்புள்ளை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு மாணவியைப் பரிசோதித்த வைத்தியர்கள், மாணவி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று பெற்றோரிடம் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து, மாணவியின் மரணம் தொடர்பாக கண்டறிவதற்கு, மாணவியின் வீட்டுக்குப் பொலிஸார் சென்றனர்.

எனினும், மாணவியின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## இரட்டைக் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி 6 பேரும், 2015 ஆம் ஆண்டில் இரண்டு நபர்களைத் தாக்கி, பின்னர் அவர்களை வாகனம் ஒன்றினால் மோதி படுகொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த அம்பாறை மேல் நீதிமன்றம், மேற்படி 6 நபர்களும் கொலைக் குற்றவாளிகள் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளனர் என்று கூறி இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

## ஊடக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் தலைமைக் குழு வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரை கூடி ஆராய்ந்து இருந்தது. இதன் பின்னர் ஊடக சந்திப்பும் இடம்பெற்றது.

இந்த ஊடக சந்திப்பை ரெலோ கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி நடத்தியிருந்தார். ஊடக சந்திப்புக்கு முன்னதாகவே அங்கு பிரசன்னமாகியிருந்த ஊடகவியலாளர்கள், ரெலோ கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனையும் ஊடக சந்திப்பில் கலந்துகொள்ளுமாறும் பல தடவைகள் கேட்டனர்.

ஆயினும், அதற்கு மறுப்புத் தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அங்கிருந்து உடனடியாக வெளியேறிச் சென்றிருந்தார். ஊடக சந்திப்பில் தனக்கு அருகாமையில் அமர கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள் சிலரை ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி அழைத்த போதும் வேறு எவரும் அதில் கலந்துகொள்ளாது வெளியேறிச் சென்றிருந்தனர்.

இதேவேளை, இந்த ஊடக சந்திப்பில் செல்வம் அடைக்கலநாதனுக்கு எதிராகவும், கட்சிக்கு எதிராகவும் திட்டமிட்டு ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தலாவயில் இருந்து பயணித்த பயணிகள் போக்குவரத்து பஸ்ஸே வீதியை விட்டு விலகி, பள்ளத்தில் வீழ்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் உட்பட சுமார் 60 பேர் வரை பஸ்ஸில் பயணித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## ஆளும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"முழு நாடும் ஒன்றாக என்று போதைப்பொருளுக்கு எதிரான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு நாட்களில் பேலியகொட மாநகர சபை உறுப்பினரின் கணவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

அதேவேளை ஒரு மாதத்திற்கு முன்னர் தெஹிவளை-கல்கிஸை நகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரின் மகன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறான நிலைமையில் போதைப்பொருள் குற்றவாளிகளின் புகைப்படங்களை ஊடகங்களில் வெளியிட வேண்டாம் என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். இப்போதுதான் அவருக்கு அது தெரிகின்றதா? இதற்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து செவ்வந்தி உள்ளிட்ட திட்டமிட்ட குற்றச்செயல் கும்பலை சேர்ந்தவர்களை அழைத்து வரும் போது புகைப்படங்களை வெளியிட்டு பொலிஸாரே பிரசாரங்களை செய்தனர். அதன் பின்னரே பொலிஸ்மா அதிபருக்கு இப்போது அது நினைவுக்கு வந்துள்ளது.

கடந்த வரவு-செலவுத்திட்டத்தில் முன்னேற்றமடைந்துள்ள நிறுவனமாக ஸ்ரீ லங்கன் விமான சேவை உள்ளது. அதற்காக ரூ. 20,000 மில்லியன் வழங்கப்பட்டது. இப்படி நிதி வழங்கினால் அது முன்னேற்றம் காணாமல் இருக்குமா? நாட்டில் 14500 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு வழங்கிய பணத்தை பிரித்து பார்த்தால் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கும் ரூ. 17 இலட்சம் என்ற அடிப்படையில் நிதியை வழங்கியிருக்கலாம். அதேவேளை பிணையின்றி கடன் வழங்குவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால் எவருக்காவது பிணையின்றி கடன் கிடைத்துள்ளதா? என பார்த்தால் அப்படிக் கிடைக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேன பொலனறுவையைச் சேர்ந்தவர். அவர் அந்த மாவட்டத்தை அபிவிருத்தி செய்துள்ளார். அதேபோன்று மஹிந்த ராஜபக்ஷவும் அம்பாந்தோட்டையை அபிவிருத்தி செய்துள்ளார். அத்துடன் கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பை அபிவிருத்தி செய்துள்ளார்.

நீங்கள் நாளுக்கு நாள் பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். மக்கள் வீதிக்கு இறங்கும் நிலைமை வரும். உங்களுக்கு அதிகளவில் மக்கள் வாக்களித்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் இலட்சக்கணக்கில் மக்கள் வாக்குகளை வழங்கினர். நீங்கள் அந்த சாதனைகளை உடைத்துக்கொள்ள வேண்டாம். நிமல் சிறிபால டி சில்வா போன்றோர் உங்களைப் போன்று சாதனை வாக்குகளைப் பெற்றனர். இப்போது வீட்டில் இருக்கின்றார்.

இதுபோன்ற நிலைமை உங்களுக்கு வரும். இப்போது நாங்கள் காட்டுச் செடிகள், நீங்கள் தங்கச் செடிகள். ஆனால், இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் காட்டுச் செடிகளாகி, நாங்கள் தங்கச் செடிகளாகிவிடுவோம்." - என்றார்.

# யாழில் இடம்பெற்ற மோதல்- ஐவர் வைத்தியசாலையில்!

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குப்பிளான் சந்தியில் நேற்றிரவு (09) ஏற்பட்ட குழு மோதலில் ஐவர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு குழுவினை சேர்ந்த ஒருவரும், மற்றைய குழுவினரை சேர்ந்த மூவரும், சமாதானப்படுத்த சென்ற முச்சக்கர வண்டி சாரதியுமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மது போதையில் இந்த மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் போட்டியின் போது ஏற்பட்ட விபத்து— ஒருவர் பலி!

*மினுவாங்கடை, அளுதெபொல பிரதேசத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின் போது ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.*

*மினுவன்கொட அதுலுபொல பொது விளையாட்டரங்கில் நேற்று மாலை இடம்பெற்ற கிரிக்கட் போட்டியின் போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*போட்டியின் போது ஆட்டமிழப்பு ஒன்றுக்காக இரண்டு வீரர்கள் பந்தை பிடிக்க முயன்ற வேளை ஒருவருடன் ஒருவர் மோதிக்கொண்டதில் ஒருவர் காயமடைந்தார்.*

*காயமடைந்த நபர் மினுவாங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.*

*எனினும், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*பளுகஹாவெல கெட்டுவெல்கம பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய இஹலகே தனுஷ்க தேவிந்த பெரேரா என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மினுவாங்கொடை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# கார்ப்பரேட்......

தி.மு.க அரசோ, மேல்முறையீட்டுக்கு மேல் மேல்முறையீடு, காவிரி ஒழுங்காற்றுக்குழு, காவிரி மேலாண்மை வாரியம், உச்ச நீதிமன்றம் என ஒவ்வொரு படிப்படியாய் ஏறி கெஞ்சிக் கொண்டு சட்டப் போராட்டத்தில் மூழ்கிக் கிடக்கிறது. தெலுங்கான முதல்வர் சந்திரசேகர் ராவ் போல, தனது சொந்தக் கட்சியினரைக் கொண்டு கர்நாடக அரசுக்கு எதிராகவோ அல்லது ஒன்றிய அரசுக்கு எதிராகவோ போராட்டம் நடத்தலாம், ஆனால் அத்தகைய போராட்டத்தை நடத்துவதற்கெல்லாம் திமுக தயாராக இல்லை. நீட்டுக்கு எதிரான தி.மு.க இளைஞரணியின் போராட்டம்கூட பெயரளவிற்கானதாகத்தான் இருக்கிறது. தனது சொந்தக் கட்சியினர் மட்டுமல்ல, பிற மக்களும், விவசாயிகளும் தங்களது உரிமைக்கான போராட்டம் நடத்தக்கூடாது என்பதில் குறியாக இருக்கிறது தி.மு.க. தி.மு.க ஆதரவு அறிவுஜீவிகளும், ஜனநாயக சக்திகளும்கூட தமிழ்நாட்டின் உரிமைப் போராட்டத்தை தி.மு.க.விடம் ஒப்படைத்துவிட்டு தி.மு.கவிற்கு உறுதுணையாக இருப்போம் என்பதோடு நிறுத்திக் கொள்கின்றனர்.

அதுமட்டுமின்றி, 1990-களிலிருந்து தனியார்மயம் தாராளமயம் உலகமயம் என்ற மறுகாலனியாக்கக் கொள்கைதான் இந்திய அரசின் கொள்கையாக இருக்கிறது. ஓட்டுமொத்த ஓட்டுக் கட்சிகளும் இந்தக் கொள்கையைத்தான் தாங்கள் ஆட்சியில் இருக்கும்போது நிறைவேற்றுகின்றன. இக்கொள்கைகளை அமல்படுத்தத் தொடங்கியதிலிருந்து, ஏகாதிபத்திய கார்ப்பரேட் நலன் சார்ந்த சேவைத்துறைகளுக்கும், நகரமயமாக்கலுக்குமே மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் முன்னுரிமை கொடுக்கின்றன. இந்தியாவின் பாரம்பரிய சுய சார்பு விவசாயமோ தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 30 ஆண்டுகளில், நகரமயமாக்கமும், சேவைத்துறையும் அசுர வேகத்தில் வளர்ச்சிக் கண்டிருக்கின்றன. இந்திய விவசாயமோ குற்றுயிரும் குலையுயிருமாகக்கிடக்கிறது. ஒருபுறம், நகரமயமாக்கத்தால், ரியல் எஸ்டேட் தொழில் பெருமளவில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. விவசாய நிலங்களும், நீர்நிலைகளும் பெருமளவில் ஆக்கிரமிக்கப்பட்டு கட்டிடங்களாக மாறியிருக்கின்றன. தற்போது தீவிரப்படுத்தப்படும் மறுகாலனியாக்கக் கொள்கையால் வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில் காடுகளும், விவசாய நிலங்களும், நீர்நிலைகளும்தான் குறி வைக்கப்படுகின்றன.

மற்றொருபுறம், நகரமயமாக்கலால், இயற்கை வளங்களான மணல், குன்றுகள், மலைகள் ஆகியவை கட்டுமான தேவைகளுக்காகத் தொடர்ச்சியாக சூறையாடப்படுகின்றன. இந்த ரியல் எஸ்டேட் தொழிலும், மணல் குவாரி, கல் குவாரி அமைப்பதிலும் தி.மு.க, அ.தி.மு.க என கட்சியினரே கொடிகட்டி பறக்கின்றனர். ஆளுங்கட்சி எந்தக் கட்சியோ, அந்த காலங்களில் இத்தொழிலில் அவர்களது ராஜ்ஜியம்தான் என்பதே யதார்த்தமாக இருக்கிறது. தற்போது தி.மு.க ஆட்சி என்பதால்,

இந்த பொருளாதாரச் சார்பும் காவிரி விவகாரத்தில் குறிப்பிட்ட அளவு வினையாற்றவே செய்கிறது. இதனால்தான், மழை வந்தால் காவிரிப் பிரச்சினையைக் கிடப்பில் போடுவதும், மழையில்லாவிட்டால், பெயரளவுக்கு காவிரி பிரச்சினையைக் கையிலெடுப்பதுமாக இருக்கிறது,

தி.முக. அதுவும் கூட, காவிரிப் படுகையின் வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியமாக இருப்பதாலும், தமிழ்நாடு மக்களின் அழுத்தத்தாலும் இந்த சடங்குத்தனமான சட்டப் போராட்டமும் நடக்கிறது.

எனவே தமிழ்நாடு மக்களும், விவசாயிகளும் தி.மு.கவை மட்டும் நம்பிக் கொண்டிருந்தால் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட முடியாது என்பதை நீட் போராட்டம் ஏற்கனவே நமக்கு உணர்த்திவிட்டது. காவிரி நீருக்குத் தடையாக இருக்கின்ற கார்ப்பரேட் திட்டங்களையும், அதற்கு ஆதாரமான மறுகாலனியாக்கக் கொள்கையையும் எதிர்த்து தமிழ்நாடு மக்கள் தங்களது சொந்த பலத்தில் மீண்டும் ஒரு மெரினா (ஜல்லிக்கட்டு) போராட்டம் நடத்தாமல் காவிரி நீர் தமிழ்நாட்டிற்குக் கிடைக்காது. எனவே,

தொடங்குவோம் மீண்டுமொரு டெல்லிக்கட்டு. வேண்டாம் பி.ஜே.பி! வேண்டும் ஜனநாயகம்! வேண்டும் காவிரி நீர் என்று முழங்குவோம்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2025 வெளியிடப்பெற்றது.